## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஐந்தாம் பத்து

## மூன்றாம் திருமொழி - வென்றி
## திருவெள்ளறை

** வென்றி மாமழு ஏந்தி முன் மண்
மிசை மன்னரை * மூவெழுகால்
கொன்ற தேவ! * நின் குரை கழல் தொழுவதோர்
வகை * எனக்கு அருள் புரியே **
மன்றில் மாம்பொழில் நுழை தந்து *
மல்லிகை மௌவலின் போது அலர்த்தி *
தென்றல் மாமணம் கமழ் தர வரு *
திருவெள்ளறை நின்றானே 1

வசை இல் நான்மறை கெடுத்த அம்மலர்
அயற்கு அருளி * முன் பரிமுகமாய் *
இசை கொள் வேத நூல் என்றிவை பயந்தவனே! *
எனக்கு அருள் புரியே **
உயர் கொள் மாதவிப் போதொடு உலாவிய *
மாருதம் வீதியின் வாய் *
திசை எல்லாம் கமழும் பொழில் சூழ் *
திருவெள்ளறை நின்றானே 2

வெய்யனாய் உலகு ஏழுடன் நலிந்தவன் *
உடலகம் இரு பிளவா *
கையில் நீள் உகிர்ப் படை அது வாய்த்தவனே! *
எனக்கு அருள் புரியே **
மையின் ஆர்தரு வரால் இனம் பாய *
வண் தடத்திடைக் கமலங்கள் *
தெய்வ நாறும் ஒண்பொய்கைகள் சூழ் *
திருவெள்ளறை நின்றானே 3

வாம் பரி உக மன்னர் தம் உயிர் செக *
ஐவர்கட்கு அரசு அளித்த *
காம்பினார் திருவேங்கடப் பொருப்ப! *
நின் காதலை அருள் எனக்கு **
மாம்பொழில் தளிர் கோதிய மடக்குயில் *
வாயது துவர்ப்பெய்த *
தீம்பலங்கனித் தேன் அது நுகர் *
திருவெள்ளறை நின்றானே 4

மானவேல் ஒண்கண் மடவரல் * மண்மகள்
அழுங்க முந்நீர்ப் பரப்பில் *
ஏனமாகி அன்று இரு நிலம் இடந்தவனே! *
எனக்கு அருள் புரியே **
கான மாமுல்லை கழைக் கரும்பேறி *
வெண்முறுவல் செய்து அலர்கின்ற *
தேனின் வாய் மலர் முருகு உகுக்கும் *
திருவெள்ளறை நின்றானே 5

பொங்கு நீள்முடி அமரர்கள் தொழுது எழ *
அமுதினைக் கொடுத்து அளிப்பான் *
அங்கோர் ஆமை அதாகிய ஆதி! *
நின் அடிமையை அருள் எனக்கு **
தங்கு பேடையோடு ஊடிய மதுகரம் *
தையலார் குழல் அணைவான் *
திங்கள் தோய் சென்னி மாடம் சென்றணை *
திருவெள்ளறை நின்றானே 6

ஆறினோடு ஒரு நான்குடை நெடுமுடி *
அரக்கன் தன் சிரம் எல்லாம் *
வேறு வேறுக வில்லது வளைத்தவனே! *
எனக்கு அருள் புரியே **
மாறில் சோதிய மரதகப் பாசடைத் *
தாமரை மலர் வார்ந்த *
தேறல் மாந்தி வண்டு இன்னிசை முரல் *
திருவெள்ளறை நின்றானே 7

முன் இவ்வேழுலகு உணர்வின்றி இருள் மிக *
உம்பர்கள் தொழுது ஏத்த *
அன்னமாகி அன்று அருமறை பயந்தவனே! *
எனக்கு அருள் புரியே **
மன்னு கேதகை சூதகம் என்றிவை *
வனத்திடைச் சுரும்பினங்கள் *
தென்னவென்று வண்டு இன்னிசை முரல் *
திருவெள்ளறை நின்றானே 8

ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று *
அகலிடம் முழுதினையும் *
பாங்கினால் கொண்ட பரம! நிற்பணிந்து
எழுவேன் * எனக்கு அருள் புரியே **
ஓங்கு பிண்டியின் செம்மலர் ஏறி * வண்டு
உழிதர * மாவேறித்
தீங்குயில் மிழற்றும் படப்பைத் *
திருவெள்ளறை நின்றானே 9

** மஞ்சுலா மணிமாடங்கள் சூழ் *
திருவெள்ளறை அதன் மேய *
அஞ்சனம் புரையும் திரு உருவனை *
ஆதியை அமுதத்தை **
நஞ்சு உலாவிய வேல் வலவன் *
கலிகன்றி சொல் ஐயிரண்டும் *
எஞ்சல் இன்றி நின்றேத்த வல்லார் *
இமையோர்க்கு அரசு ஆவர்களே 10

**அடிவரவு:** வென்றி வசை வெய்ய வாம்பரி மானவேல் பொங்கு ஆறு முன் ஆங்கு மஞ்சு உந்திமேல்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**